BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

## ப்ராம்ப்ட்டன் நகரில் சுற்றுலாத்துறையை விரிவாக்கம் செய்ய புதிய செயல் திட்டம் ஒன்றுக்கு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஒப்புதல் வழங்குகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 22, 2021) – நேற்றைய தினம், நகரசபையானது ஐந்தாண்டுக்கால, சுற்றுலாத்துறை யுக்திக்கு (Tourism Strategy) ஒப்புதல் வழங்கியது; இது ப்ராம்ப்ட்டன் நகரை சுற்றுலாவுக்கு உகந்த நகரமாக ஆக்கவும், உள்ளூர் பொருளாதாரத்தை விரிவுபடுத்தி கட்டமைக்கவும், குடியிருப்புவாசிகளிடையே இந்நகரம் நகரை பெருமைக்குரிய நகரம் என்ற கருத்தை ஆழப்பதியச் செய்யவும் இலக்கு கொண்டுள்ளது.

சுற்றுலாத்துறை எனும் யுக்தியானது (Tourism The Strategy), பேன்னிக்கின் ட்ராவெல் (Bannikin Travel) மற்றும் சுற்றுலா மற்றும் கலீனரி டூரிஸம் அல்லையன்ஸ் (Tourism and the Culinary Tourism Alliance) ஆகியோர் இதில் இணை அமைப்பாளர்கள் ஆவர்; இவர்கள் கலை மற்றும் கலாச்சாரம், உணவுக்கான சுற்றுலா, சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு வகை சுற்றுலா ஆகியவற்றை அடையாளம் காட்டுவர்; இவையே சுற்றுலா மேற்கொள்பவர்களை ஈர்க்கின்ற மற்றும் பொதுமக்களை பெருமிதம் கொள்ள வைக்கின்ற வகையிலான ப்ராம்ப்ட்டன் நகரின் மிக உன்னதமான வலிமைகள் ஆகும்.

ஒன்ட்டேரியோவின் சுற்றுலாத்துறையினருக்கான சங்கத்தின் (Tourism Industry Association of Ontario), கூற்றுப்படி, கோவிட் –க்கு முன்பாக, சுற்றுலாத்துறையின் பொருளாதாரப் பங்களிப்பானது விவசாயத்துறை, வனத்துறை மற்றும் கனிம வளத்துறை ஆகிய இவை அனைத்தின் கூட்டுப்பங்களிப்பைக் காட்டிலும் மிகஅதிகமானதாக இருந்தது. ப்ராம்ப்ட்டன் நகரை சுற்றுலாவுக்கு உகந்தது எனக் கருதும்படியான நகரமாக உருவாக்குவதன் மூலம், கோவிட்-19 லிருந்து இந்நகரின் உள்ளூர்ப் பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளிக்கும்; அதே சமயத்தில் குடியிருப்புவாசிகளின் பாராட்டுக்களையும் அதிகரிக்கும்.

பெருந்தொற்று பரவல் பேரிலான சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக்கான வழிகாட்டு நெறிகள் பிரயாணம் மற்றும் சுற்றுலாத்துறையின் அனைத்து அம்சங்களையும் பாதித்துள்ளன; இதில் உள்நாட்டு மற்றும் உள்ளூரிலேயே இருக்கின்றவர்களுக்கும் சுற்றுலாவை மையமாகக் கொண்ட ஒரு ஆதாரப்புள்ளி தேவைப்படுகிறது; வரும் ஆண்டுகளிலும் இப்படித்தான் இருக்கும் என தொழில்சார் வல்லுநர்கள் கணிக்கின்றனர்.

சுற்றுலாத்துறையை வளர்ப்பதற்கான யுக்தியை உருவாக்குவதற்கென ஒரு ஆராய்ச்சியின் செய்து முடிக்கப்பட்டது; அதன்படி, மக்கள் இப்போது வீட்டிற்கு அருகாமையிலேயே அனுபவங்களைத் தேட

முயல்கிறார்கள் என்பது தெரியவருகிறது மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கம் சமீபத்தில் மாகாணத்திற்குள் பயணம் செய்வதற்கான சுற்றுலா வரிக்கான வரவு வைப்பது பற்றி அறிவித்தது. ப்ராம்ப்ட்டன் நகர குடியிருப்பாளர்களுக்கும், நகரத்தின் நெருங்கிய ஊர்களில் இருப்பவர்களுக்கும் ஒரு சுற்றுலா தலமாக தன்னை பாதுகாப்பாக நிலைநிறுத்திக் கொள்ள ப்ராம்ப்ட்டன் நகருக்கு இந்தப்புதிய போக்கானது, ஒரு வாய்ப்பாகும். நகரத்தின் பொருளாதார மீட்பு யுக்தியின் முக்கிய தூணாக இருக்கின்ற அதன் வளர்ச்சியில் பங்கேற்பவர்களுக்கு ஆதரவளிக்கவும், உள்ளூர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஆதரவளிக்கவும் சுற்றுலாத்துறைக்கு இது ஒரு அடித்தளத்தை உருவாக்கும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் என்பது, ஒரு பிரகாசமான எதிர்காலம் மற்றும் சுற்றுலாவுக்கு ஒரு புதிய பார்வையைக் கொடுக்கின்ற கொண்ட பலகலவை கொண்ட நகரமாகும். சுற்றுலா என்பது எங்கள் துடிப்பான நகரத்தின் அமைவிடங்களையும் எண்ணற்ற மறைக்கப்பட்ட ரத்தினம் போன்ற பகுதிகளையும் கொண்டாடுகிறது. நாட்டிலேயே மிக அதிக அல்வில் பலதரப்பினரையும் கொண்ட நகரங்களில் ஒன்றாக, கலை, உணவு மற்றும் கலாச்சார கொண்டாட்டங்கள் உட்பட, அனைவருக்கும் ரசிப்பதற்கேற்ற, கலாச்சாரத்தின் பரந்த அளவிலான நிஜ நிலை வெளிப்பாடுகள் உள்ளன. நமது அழகான ப்ராம்ப்ட்டன் நகரம் வழங்கும் விஷயங்கள் அனைத்தையும் நாம் அனைவரும் மீண்டும் பாதுகாப்பாக அனுபவிப்பது எப்போது எனக் காத்திருப்பதில் நான் மிகவும் பரவசமடைகிறேன்.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரை ஒரு சுற்றுலா தலமாக மாற்றுவதற்கும், அதற்கு ஒரு துணிச்சலான எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் நகரசபை ஒப்புதல் அளித்த யுக்தியானது, நகரை முன்னோக்கி நகர்த்த உதவும். நாங்கள் வழங்க இருக்கின்ற அனைத்து வசதிகளையும் காண்பிப்பதன் மூலம் எங்கள் குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்களின் மனத்தில் பெருமையை இருத்த இது உதவும்; மேலும் நகரத்தை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வருவதிலும் பொருளாதார மீட்சியிலும் சுற்றுலாத்துறை வழங்கக்கூடிய வாய்ப்பை இது வெளிச்சம் போட்டு காட்டுகிறது. "

- *மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப் பொறுப்பு, பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"சுற்றுலாத்துறைக்கான இந்த யுக்தியானது, *எங்கள் கவுன்சிலின் ஆயுட்காலத்தில்* அளிக்கப்படவேண்டிய கால முன்னுரிமை கொண்ட விஷயங்களுடன் ஒத்துப்போகிறது- ப்ராம்ப்ட்டன் ஒரு பலகலவை கொண்ட நகரம், மற்றும் குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகத்தின் நல்வாழ்வுக்கு பங்களிக்கிறது. நன்கு நிர்வகிக்கப்பட்ட சுற்றுலாத்துறையானது, பொருளாதாரம் வேலைவாய்ப்பு, பொருளாதார ஆதாயம், ஆகியவற்றுடன் வசதியமைப்பு கட்டிடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு ஆகியவற்றில் முதலீடு செய்வதற்கும், ஒவ்வொரு நாளும் எங்கள் நகரத்தை அனுபவிக்கும் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிப்பதற்கும் உதவுகிறது என்பதை நாங்கள் அறிவோம். "

- *பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, துணைத் தலைமைப் பொறுப்பு, பொருளாதார மேம்பாடு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் நகரின் கலாச்சாரம், உணவு வகைகள், பசுமையான இடங்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவை இந்நகரை துடிப்புமிக்க நகராக்குகின்றன; இதனால் நமது குடியிருப்பாளர்கள் தங்கள் நகருக்கு மற்றவர்களை அழைப்பதில் பெருமிதம் கொள்கின்றனர். புதிய சுற்றுலாத்துறைக்கான எங்கள் யுக்தியின் மூலமாக, இந்த அம்சங்களைச் சேர்த்து, உள்கட்டமைப்புகளில் அதிக முதலீட்டை ஈர்ப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்; இதில், விரிவாக்கம் செய்யப்பட்ட போக்குவரத்து, விளையாட்டு மற்றும் சிறப்பு நிகழ்வுகளுக்கான கட்டிட வசதிகள் மற்றும் சுற்றுலாத்துறை செழித்து வளர உதவும் வகையில் நகர்ப்புற அழகுபடுத்தல் போன்ற வசதிகள் அடங்கும். ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்..

**ஊடக தொடர்புகள்**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுதிரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca